<u>Deposition of Witness</u>

**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

Mcop 381/2021

எ.ம.சா.1 திருமலைக்கனி

| | | |
|---|---|---|
| Name | : | திருமலைக்கனி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 11.10.2023 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் சா.சா.ஆ1. டி.என்.76.எப்.5303 என்ற ஆட்டோவிற்கு பெர்மிட் இல்லை என்பதற்கான சான்று உண்மை நகல் சா.சா.ஆ2. குற்ற எண் அழைப்பாணையில் சொல்லப்படாததால் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்ய முடியவில்லை. டி.என்.76.எப்.5303 என்ற வாகனத்திற்கு விபத்து சமயத்தில் அனுமதி சான்று வழங்கப்படவில்லை.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

டி.என்.76.எப்.5303 என்ற ஆட்டோவிற்கு 25.9.18 முதல் 24.9.2019 வரை காப்பீடு உள்ளது என்றால் காப்பீடு சான்று இன்றையதேதியில் உள்ளது தான் எங்களது அலுவலகத்தில் துலங்கும். 2020 முதல் 2021 கொரேணா காரணமாக வாகனம்

சம்பந்தமான அனைத்து புதுப்பித்தல்களுக்கு போதுமான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று அரசாணை உள்ளது என்றால் சரிதான். அந்த அரசாணை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். அது ம.சா.ஆ9.ஆகும். மேற்படி அரசாணையின்படி உரிமம் புதுப்பிக்காததால் பழைய உரிமம் நடைமுறையில் உள்ளதாக துலங்கும் என்றால் காப்பீடு பற்றி அந்த அரசாணையில் குறிப்பிடவில்லை. கொரேணா காலத்தில் உரிமம் இருப்பதாக தான் துலங்கிறது. இழப்பீடு கொடுப்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.கொரேணா காலத்தில் விபத்து ஏற்பட்டால் அதற்குரிய இழப்பீடு தொகையை அந்த வாகனத்தின் உரிமையாளர் காப்பீட்டை புதுப்பிக்காமல் இருந்தால் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால் அது காப்பீடு நிறுவனத்திற்கு தான் தெரியும். அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து 23.7.2020ம் தேதி நடைபெற்றுள்ளதால் விபத்து வாகனத்தை ஆய்வு செய்யும் போது மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று சமர்ப்பிக்கவில்லை என்பதால் தான் கோவிட்ட 19 என போடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. என்னிடம் காட்டப்படும் மோ.வாகன ஆய்வாளர் அறிக்கையில் கோவிட் 19 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்ன காரணம் என்றால் காப்பீடு நிலுவையில் உள்ளது என்பதாகும். 23.7.2020ம் தேதி நடைபெற்ற விபத்திற்கு கோவிட்ட 19 காரணமாக உரிமத்தை புதுப்பிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிட் 19 காலத்தில் அரசாணை பிறப்பித்துள்ள ஆணையின்படி 3ம் எதிர்மனுதாரர் சேர்ந்தோ, தனித்தோ மனுதாருக்கு இழப்பீடுகொடுக்க கடமைப்பட்டவர் என்றால அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் விஜயனுக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர் பாலசுப்பிரமணியத்திற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான்.